Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 25, 2023

வியாழக்கிழமை ஜனவரி 24, 2024 | ஒளி: 10 கதிர் 179 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

220 இலட்சம் மக்களின் அபிலாஷைகளை கருதி

# “வாபஸ் பெறவும்”

**ஊடக கலாசாரத்தை புதைத்து, நாட்டை கற்காலத்திற்குக் ொண்டுசெல்லும்**

**ஜனநாயக உரிமையை அழிக்கும் நோக்கிலேயே இந்தச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது**



பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களின் தனிப்பட்ட அபிலாஷைகளை விடுத்து, 220 இலட்சம் மக்களின் பொதுவான அபிலாஷைகளை கருத்திற் கொண்டு இந்த சட்டமூலத்தை உடனடியாக வாபஸ் பெறுங்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பான இரண்டாம் நாள் விவாதம் புதன்கிழமை (24) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சட்டவாக்கத்துறையில் சட்டவாக்கம் மிக மேலான அறிவார்ந்த முறையில் நடக்க வேண்டும் என்றாலும், நிகழ்நிலை காப்பு தொடர்பான சட்டமூலத்தில் இவ்வாறு எதும் நடக்கவில்லை. தனிப்பட்ட ரீதியிலான தனிநபர்களின் பெயர்களுக்கு கலங்கம் விளைவித்தல்,

தொடர்ச்சி P2

## ஒன்லைன் சட்டமூலம் நிறைவேறியது

பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (23), புதன்கிழமை (24) நடைபெற்ற நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம் மீதான விவாதத்தின் பின்னர், புதன்கிழமை (24) மாலை வாக்கெடுப்புக்கு விடுக்கப்பட்டது.

சட்டமூலத்தை வாக்கெடுப்புக்கு விடுமாறு, எதிர்க்கட்சி பிரதம கொறடாவான ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரினார்.

தொடர்ச்சி P2



## ஆனையிறவில் கோர விபத்து: பெண் பலி: எண்மர் படுகாயம்

**விபத்தில் 9 எருமை மாடுகள் உயிரிழந்துள்ளன**

யது பாஸ்கரன்

கிளிநொச்சி ஏ-09 வீதியின் ஆனையிறவு அண்மித்த பகுதியில் புதன்கிழமை (24) ) அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்ததுடன், எட்டு பேர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## மல்கம் ரஞ்சித் ஆண்டகை மனு

**24 மனுக்கள தாக்கல்: சபாநாயகர்**

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்குமாறு கோரி கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உயர் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவில் சட்டமா அதிபர் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## நெற்புதிர் அறுவடை

நல்லூர் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை நிகழ்வு புதன்கிழமை (24) காலை இடம்பெற்றது. தைப்பூச தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் ‘புதிர் தினம்’ எனும் பாரம்பரிய நிகழ்வில் கோவில் அறங்காவலரும், சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மறவன்புலவில் உள்ள வயலுக்குச் செல்வார்கள்.

அந்த வயலில் பூஜை வழிபாட்டுடன் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தசுவாமியாருக்கு படையல் செய்து பூசைகள் செய்வது வழக்கம். அவ்வாறே இம்முறையும் இடம்பெற்ற படையல் பூஜைகளைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## “நான்காவது தூணை அடக்கும் சட்டம்”



மக்களின் கருத்துச் சுதந்திரத்தை கல்லறையில் வைக்கும் வகையிலேயே நிகழ்நிலை காப்புச் சட்டம் அமையும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மூன்று மீனவர்கள் படுகொலை: 7 மீனவர்களுக்கு மரண தண்டனை

மீனவர்கள் மூவரை படுகொலைச் செய்துவிட்டு மீன்பிடி படகை கடத்திச் சென்றனர் எனக் குற்றஞ்சாட்டப்படிருந்த மூன்று மீனவர்களையும் குற்றவாளிகளாக இனங்கண்ட கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஆதித்யா பட்டபெந்திகே, அம்மூவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

தொடர்ச்சி P2

## “20க்கு நேர்ந்த கதியே ஏற்படும்”



சிங்கப்பூர் நாட்டை போன்று ஊடக அடக்குமுறை கடுமையாக உள்ள நாடு ஆசியாவில் இல்லை. ஆகவே, சிங்கப்பூர் மாதிரியிலான வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு நேர்ந்த கதியே நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கும் நேரிடும் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “8 ஏக்கர் காணியை மீள கையளிப்போம்”

**சாணக்கியன் முன்வைக்கும் கருத்தை நிராகரிக்க வேண்டியுள்ளது**



நாட்டின் தற்கால மற்றும் எதிர்கால பாதுகாப்பை கருத்திற்கொண்டு பல பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பாட்டுள்ளதாகவும், இந்நிலையில் வடக்கு, கிழக்கில் மாத்திரம் இராணுவ முகாம்கள் இருப்பதாக முன்வைக்கப்படும் கருத்துக்களை நிராகரிப்பதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரா.

தொடர்ச்சி P2

ஐவர் படுகொலை விவகாரம்:

## சாரதி கைது வாகனமும் சிக்கியது




பெலியத்தவில் திங்கட்கிழமை (22) ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு தலைமை தாங்கிய இலங்கையைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



வலைத்தளங்களை

## முடக்கி இருக்காவிடின் கலவரம் வெடித்திருக்கும்

பொய்யான தகவல்களைப் பரப்புபவர்களுக்குத் தண்டனை வழங்கக் கூடியவகையில் நாட்டில் ஊடக கட்டுப்பாட்டுச் சட்டம் அவசியம் என்று தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, திகன சம்பவத்துக்குப் பின்னர் ஒரு வாரத்துக்கு சமூக வலைத்தளங்களை நான் முடக்கியிருந்தேன். அவ்வாறு முடக்கியிருக்காவிடின், நாடு முழுவதும் கலவரம் வெடித்திருக்கும் என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) நடைபெற்ற நிகழ்நிலை காப்புச் சட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

## ஆசிரியர் பற்றாக்குறை: பெப்ரவரியில் தீர்வு



நாடு முழுவும் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினைக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் இறுதியாகும்போது முடிவு காணப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த விசேட கூற்றுக்கு பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு குறிப்பிட்டார்.

விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாடு முழுவதுமாக 40ஆயிரம் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகிறது. அதனால் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2



## “மக்கள் காணிகளில் இராணுவ விவசாயம்”

**பாதுகாப்பு காரணங்களுக்காக என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை**

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகின்ற போதும் பாதுகாப்பு காரணங்களுக்காக வடக்கு, கிழக்கில் மாத்திரம் சில இடங்களில் இராணுவ முகாம்களை வைத்திருப்பதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி P2




## ID இலக்கமே TIN இலக்கம்

வரி செலுத்துனரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை (ID) வரி செலுத்துனர் அடையாள இலக்கமாக (Taxpayer Identification Number-TIN ), பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “வாபஸ் பெறவும்”

தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல் என்பவற்றிற்காக அமைச்சர்களால் இந்த சட்டமூலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக 220 இலட்சம் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

220 இலட்சம் மக்களின் பொதுவான அபிலாஷைகளின் அடிப்படையில் சட்டங்களை உருவாக்குவதற்குப் பதிலாக, பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரின் தனிப்பட்ட அபிலாஷைகளை அடையும் நோக்கில் சட்டம் இயற்றப்பட்டால், இந்நாட்டில் பாராளுமன்றத்தின் தரம் தொடர்பான பிரச்சினை ஏற்படுவதாகப் பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வை குழுவும் இந்தச் சட்டமூலத்தில் தனது கடமையைச் சரியாக நிறைவேற்றவில்லை குற்றஞ்சாட்டினார்.

நவீன ஊடக பாரம்பரியத்தை உருவாக்குவதை விடுத்து இளைஞர்களின் உரிமைகளைப் பறிக்கும் பாரம்பரியத்தைக் கையாண்டு, இவ்வாறான சட்டங்களை நிறைவேற்றி, ஊடக கலாசாரத்தை குழி தோண்டிப் புதைத்து, நாட்டை கற்காலத்திற்குக் கொண்டுசெல்லும் தீர்மானத்தை நிறைவேற்றிய குழுவாகவே இந்த துறைசார் மேற்பார்வை குழுவைக் கூறலாம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நடைபெறவுள்ள இந்த வருடத்தில் நாட்டு மக்களின் பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமையை அழிக்கும் நோக்கிலேயே இந்தச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலத்தின் மூலம் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். நிகழ்நிலை காப்பு சட்டத்தால் சமூக ஊடகங்கள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றன.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் 03 தூண்களான சட்டமன்றம், நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய 3 தூண்களோடு புதிய தூணாக நவீன உலகில் கருதப்படும் ஊடகங்கள் இந்த நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தால் கடுமையாக பாதிக்கப்படும். இதனால் ஊடக சுதந்திரம் மற்றும் சமூக ஊடக சுதந்திரம் என்பன கட்டுப்படுத்தப்படும் என்றார்.

# ஒன்லைன் சட்டமூலம் நிறைவேறியது

அதன்பின்னர், வாக்கழைப்பு மணி ஒலிக்கப்பட்டது. சபைக்கு வெளியே இருந்த எம்.பிக்கள்,சபைக்குள் பிரவேசித்தனர் பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில், சட்டமூலத்துக்கு 108 ஆதரவாக வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதனடிப்படையில், 46 மேலதிக வாக்குகளால் நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது.

# சாரதி கைது வாகனமும் சிக்கியது

அத்துடன், அதற்குப் பயன்படுத்திய வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மாத்தறை பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியின் மேற்பார்வையில் ஹக்மன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழு நடத்திய விசாரணையில், கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்த குற்றத்திற்கு மூளையாகச் செயல்பட்டதாகக் கூறப்படும் சமன் குமார என்ற 54 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். குற்றத்திற்காக வந்த 65-2615 இலக்கம் கொண்ட மிட்சுபிஷி பெஜேரோ ஜீப்பையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என அமைச்சு தெரிவித்துள்ளது.

குற்றத்தை புரிவதற்காக வந்தவர், வாகனத்தை செலுத்தி வந்துள்ளார் என மேலும் தெரியவந்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# “8 ஏக்கர் காணியை மீள கையளிப்போம்”

சாணக்கியன் எம்.பியினால் மட்டக்களப்பு குருக்கள் மடம் கலைவாணி மகாவித்தியாலயத்தின் மைதானம் இராணுவத்தினர் வசமிருப்பதாகத் தெரிவித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

இராணுவ முகாம்கள் வடக்கு, கிழக்கில் மாத்திரம் இல்லை. அனைத்து மாகாணங்களிலும் நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு முகாம்களை வைத்திருக்கின்றோம். இதனால் வடக்கு, கிழக்கில் மாத்திரம் இராணுவ முகாம்கள் இருப்பதாகச் சாணக்கியன் முன்வைக்கும் கருத்தை நிராகரிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, என்னிடமுள்ள தகவல்களுக்கமைய குருக்கள்மடம் பாடசாலை சுனாமி அனர்த்தத்தின் பின்னரே வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன்பின்னர் இராணுவ படைப் பிரிவொன்றின் தலைமையகம் இந்த இடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் முகாமுக்கு வெளியிலேயே குறித்த மைதானம் உள்ளது. அதற்கு அருகில் இரண்டு ஏக்கர் அளவிலான இராணுவ முகமொன்றே உள்ளது.

கிழக்கில் இதற்கு முன்னர் 44,980 ஏக்கர் இராணுவத்தினர் வசமிருந்தது. இதில் 90 சத வீதத்திற்கும் அதிகமான காணிகள் மக்களிடம் மீள்குடியேற்றத்திற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது இராணுவத்தினரிடம் 7379 ஏக்கர் காணிகளே உள்ளது. இவற்றில் 37.8 ஏக்கர் மட்டுமே தனியார் காணிகளாக உள்ளன. 7342 ஏக்கர் அரச காணிகளாகும். தனியார் காணியில் 8 ஏக்கர் காணியை இந்த வருடத்தில் மீள கையளிப்போம். இதில் இனவாதத்தை இணைக்க வேண்டாம் என்று கோருகின்றேன் என்றார்.

# ஆசிரியர் பற்றாக்குறை: பெப்ரவரியில் தீர்வு

இதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளிக்கையில்,

பட்டதாரிகள் 22ஆயிரம் பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தபோது அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு 9 மாதங்களாக விசாரணை செய்யப்பட்டுக் கடந்த வாரமே அது முடிவுக்கு வந்தது.

அடுத்த வாரமாகும்போது நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். அதேபோன்று 13,500 பேரை இணைத்துக்கொள்வதற்காக மாகாணசபைகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றன. அதுதொடர்பில் நீதிமன்றில் ரிட்மனு இருக்கின்றது. இன்றுதான் (நேற்று புதன்கிழமை ) அந்த ரிட்மனு தொடர்பான உத்தரவு வழங்கப்பட இருக்கிறது.

அந்த உத்தரவு கிடைக்கப்பெற்றால் பெரும்பான்மையான ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

மேலும், 5,500 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டு தற்போது பரீட்சை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பெப்ரவரி மாதம் இறுதியாகும்போது ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினைக்கு முடிவு காணப்படும் என்றார்.

# ID இலக்கமே TIN இலக்கம்

அத்துடன், அவ்விலக்கத்தை பொதுமக்களின் தரவுகளைப் பேணும் அரச நிறுவனங்களினூடாக வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அந்த நிறுவனங்களின் ஊடாக உரிய தரவுகளைப் பெற்று அவர்களைப் பதிவு செய்த பின்னர், பதிவு இலக்கத்தை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சட்ட ரீதியான சிக்கல்கள் இல்லாத நிறுவனங்களில் இருந்து இந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

*Online* ஊடாக வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தை பெற்றுக்கொள்வதற்காக மிகவும் இலகுவான நடைமுறையொன்றை தயாரிப்பதே இதன் நோக்கமாகும் என அவர் கூறினார்.

# ஆனையிறவில் கோர விபத்து: பெண் பலி: எண்மர் படுகாயம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தொன்று வீதியில் சென்று கொண்டிருந்த எருமை மாடுகளுடன் மோதியதுடன், வெளிநாட்டுக்குச் செல்லும் உறவினர்களை விமான நிலையத்துக்குச் சென்று வழியனுப்பி விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்த ஹயஸ் வேனிலும் மோதியே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

வெளிநாட்டுக்கு கணவரையும் மகனையும் வழியனுப்பிவிட்டு ஹயஸ் வாகனத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த பாசையூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான மார்க் வெஸ்லி அலன் கத்தரின் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு சிறுவர்கள் உட்பட 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

எருமை மாடுகள் வீதி வழியாகக் கொண்டு வந்த நபர், ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், ஏனையவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, விபத்தில் 9 எருமை மாடுகள் உயிரிழந்துள்ளதுடன், நான்கு மாடுகள் காயமடைந்துள்ளன என தெரிவித்த கிளிநொச்சி பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தனர்.

# “20க்கு நேர்ந்த கதியே ஏற்படும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) இடம்பெற்ற உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு சட்ட அதிகாரி ஆகியோர் சிங்கப்பூருக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர் அதற்கமைவாகவே நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைய ஊடக சுதந்திர சுண்டெண்ணில் சிங்கப்பூர் 145ஆவது இடத்தில் உள்ளது, ஆனால், இலங்கை சிங்கப்பூரை விடவும் ஊடக சுதந்திரத்தில் முன்னிலையில் உள்ளது.

> **“ பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு சட்ட அதிகாரி ஆகியோர் சிங்கப்பூருக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர் அதற்கமைவாகவே நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது**

மேலும், அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை நாட்டு மக்கள் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குப்படுத்தினார்கள். சிங்கப்பூரின் மாதிரியிலான பல அம்சங்களை நீக்கி உயர்நீதிமன்றம் இந்த சட்டமூலத்தில் பல திருத்தங்களை முன்வைத்துள்ளது.

நீதிமன்றம் தன்னால் இயலுமான அளவுக்கு நாட்டு மக்களின் பேச்சு, கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

# “நான்காவது தூணை அடக்கும் சட்டம்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) நடைபெற்ற நிகழ்நிலை காப்புச் சட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்நிலை காப்பு சட்டமானது ஜனநாயகத்தின் தூண்களில் நான்காவது தூணான ஊடகத்தை அடக்குவதற்கான சட்டமா? இல்லையென்றால் நல்லமுறையில் ஊடகத்தை வளப்படுத்துவதற்கான சட்டமா என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். இந்த சட்டமூலம் இன்றைய காலகட்டத்தில் எதற்காகக் கொண்டுவருகின்றது என்ற கேள்விகள் அனைவரிடத்திலும் உள்ளது. அரசியலமைப்பில் போதுமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது.

> **“ மீண்டுமொரு அரகலய போன்ற போராட்டம் இடம்பெற்று விடக்கூடாது**

அவ்வாறான அரசியலமைப்பைப் பேணிப் பாதுகாக்க வேண்டியவர்களே அரசியலமைப்பை மீறும் செயலாகவே இதனைப் பார்க்கின்றேன்.

மீண்டுமொரு அரகலய போன்ற போராட்டம் இடம்பெறுவிடக்கூடாது என்பதற்காகவே அரசாங்கம் இந்த சட்டமூலத்தை கொண்டுவருவதாகவே எனது கருத்து உள்ளது. ஆட்சியாளர்களுக்கு உள்ள பயமே இந்த சட்டமூலத்தில் வெளிப்படுகின்றது. மக்களின் கருத்துச் சுதந்திரத்தைக் கல்லறையில் வைப்பதாகவே இந்த சட்டமூலம் அமையும் என்றார் .

# நெற்புதிர் அறுவடை

இவ்வழிபாட்டு முறை அக்கோயிலின் மரபாக, பண்பாட்டு விழாவாக பேணப்பட்டு வருகிறது. இப்புதிர் விழா 290ஆவது ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# “மக்கள் காணிகளில் இராணுவ விவசாயம்”

சாணக்கியன், அங்கு இராணுவத்தினர் மக்களின் காணிகளில் இருந்துகொண்டு காணி சொந்தக் காரர்கள் பார்த்துக்கொண்டிருக்கவே விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது சாணக்கியன் எம்.பி மேலும் கூறுகையில்,

வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகின்றன. இன்னும் இந்த மாவட்டங்களில் மட்டும் சில இடங்களில் இராணுவ முகாம்களை வைத்திருப்பது பாதுகாப்பு காரணங்களுக்காக என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மட்டக்களப்பு குருக்கள்மடம் மைதானமானது பாடசாலைக்கு சொந்தமானது என்றாலும் இன்னும் இராணுவம் அதனை தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருக்கின்றது. அதனை விடுவிக்க மாவட்ட மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தாலும் அது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது.

இதேவேளை வடக்கு, கிழக்கில் பலாலி உள்ளிட்ட பிரதேசங்களில் மக்களுக்கு சொந்தமான காணிகளில் அந்த மக்கள் வேலிகளுக்கு அந்தப்பக்கம் இருந்து பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இராணுவத்தினர் விவசாயம் செய்கின்றனர். மக்கள் காணிகளையே இராணுவம் வைத்துள்ளது என்றார்.

# முடக்கி இருக்காவிடின் கலவரம் வெடித்திருக்கும்

ஊடகங்களுக்கு முகாமைத்துவமும், ஊடக கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டும். நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் சட்டதிட்டங்கள் கடுமையானதாக இருந்தாலும் ஊடகங்கள் தொடர்பில் கட்டுப்பாடுகள் அவசியமாகும்.

இந்த இடத்தில் சில விடயங்களைக் கூற வேண்டும். எனது மூத்த மகளின் வீட்டுக்குள் திருடர்கள் நுழைந்துள்ளனர். அரிசி, தேங்காய் போன்ற சமையலறையில் இருந்த பொருட்களையே கொண்டு சென்றுள்ளனர். எனக்குக் கட்டாரில் அரச தலைவருக்காக வழங்கப்பட்ட பரிசொன்றை பொலன்னறுவை நூதனசாலையில் வைத்துள்ளேன். ஆனால் ஊடகமொன்றில் காலையில் பத்திரிகை செய்தி வாசிக்கும் போது அரச தலைவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பரிசை தனது மகளின் வீட்டில் வைத்திருந்தாக கூறியுள்ளார்.

அது பொய்யாகும். நான் நூதனசாலையிலேயே எனக்குக் கிடைத்த பொருட்களை வைத்துள்ளேன். ஆனால் ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தவறானவையாக உள்ளன. இதனை மாற்ற வேண்டும். தவறு செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றார்.

# மூன்று மீனவர்கள் படுகொலை...

ஆறு குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக இனங்கண்ட மேற்கண்ட மூவருக்கும் 29 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையையும் தலா 2 மில்லியன் ரூபாய் தண்டம் விதித்த நீதிபதி சிறைத் தண்டனை ஒரே தடவையில் செயற்படுத்துவதற்கும் உத்தரவிட்டார். 2012 ஒக்டோபர் 15ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றில், சட்டவிரோதமான முறையில் இலங்கை கடலுக்குள் மீன்பிடி படகில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களைக் கடத்திச் சென்று, அதில் மூவரைப் படுகொலைச் செய்து மேலும் இருவருக்கு கடுங்காயங்களை ஏற்படுத்தி, அவர்களைக் கடலுக்குள் வீசிவிட்டு, அப்படகைக் கடத்தி, அவுஸ்திரேலியாவுக்குத் தப்பியோட முயன்றனர் என பிரதிவாதிகள் 11 பேருக்கு எதிராகச் சட்ட மா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும், வழக்கு விசாரணைகளின் போது பிரதிவாதிகளில் மூவர் மரணமடைந்துவிட்டனர். அவர்கள் இன்றி, 8 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டது. அதில், 7 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டது. மற்றுமொருவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமையால், அவர் வழக்கில் இருந்து விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# மல்கம் ரஞ்சித்...

குறித்த சட்டமூலத்தில் உள்ள விதிகள், நியாயமான காரணமின்றி எந்தவொரு நபரையும் கைது செய்து தடுத்து வைக்க இராணுவம், பொலிஸார் மற்றும் கடலோர காவல் படைக்கு அதிகாரம் அளித்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். அரசியலமைப்பில் உறுதிப்படுத்தியுள்ள தனிமனித சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, “பயங்கரவாத எதிர்ப்பு” சட்டமூலம் தொடர்பில் மேலும் 18 மனுக்கள் வயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு, புதன்கிழமை (24) அறிவித்தார்.

## மாணவனின் மர்ம மரணம்:
# மதரஸாவை ஆராய குழு நியமிப்பு

பாறுக் ஷிஹான்

மதரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பான சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக ஐவர் கொண்ட குழு ஒன்றினை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நியமித்துள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தை வீதியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் நடத்தப்படும் மதரஸா ஒன்றில் கடந்த வருடம் டிசெம்பர் (05) அன்று மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த எம்.எஸ். முஸ்அப் (வயது-13) எனும் மாணவன் தூக்கில் தொங்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மேலும் குறித்த மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகப் பொதுமக்கள் ஒன்று கூடிக் குறிப்பிட்ட மதரஸாவின் நிர்வாகி மீது தாக்குதல் மேற்கொள்ளத் தயாராகியவேளை, மேலதிக பொலிஸார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்டனர். இந்நிலையில், சாய்ந்தமருது பொலிஸாரால் மதரஸா நிர்வாகியாகிய மௌலவி கைது செய்யப்பட்டு



அழைத்துச் செல்லப்பட்டு வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டு மன்றின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து, தற்போது நீதிக்கான மய்யம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில் உள்ளிட்ட இதர தரப்பினரால் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய குறித்த மதரஸா தொடர்பில் அக்குழு துரித விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

இவ்விசாரணையை முன்னெடுக்கும் குழுவில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் அதிகாரி மற்றும் 4 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கம் வகிப்பதுடன் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இவ்விடயம் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றினையும் அக்குழுவினர் வெளியிடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தால் பாதிப்புற்ற வேளாண்மை அவதானிப்பு



வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அழிவுற்றுள்ள வேளாண்மைச் செய்கையின் பாதிப்பு நிலவரம் தொடர்பில் நேரில் பார்வையிட்டு ஆராய்ந்து விவசாயிகளையும் சந்தித்து ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் கண்டறிவதற்காக உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளது.

இக்குழுவில் விவசாயத் திணைக்களம், மற்றும் காப்புறுதி கூட்டுத்தாபத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இணைந்துள்ளனர்.

இக்குழு மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் அதிகளவு வெள்ளத்தால் பாதிப்புற்ற வெல்லாவெளி பிரதேசத்திற்கு செவ்வாய்க்கிழமை (23) விஜயம் மேற்கொண்டு அங்கு வேளாண்மைச் செய்கை வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து நேரில் பார்வையிட்டதுடன், விவசாயிகளிடமும் கேட்டறிந்து கொண்டுள்ளது.

# இன்று தைப்பூசத்தில் பொங்கல் கவியரங்கம்

வி.ரி. சகாதேவராஜா

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் பொங்கல் கவியரங்கம் வியாழக்கிழமை(25) தைப்பூச தினத்தன்று சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டின் யுலேகா முரளிதரன் கலந்து சிறப்பிப்பார்.

சிறப்பு அதிதியாகக் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் சித்திரப்போடி மாமாங்கராஜா ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள்.

தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி மு.கணேசராஜா வரவேற்புரை நிகழ்த்த, தமிழ்ச்சங்க காப்பாளர் கலாநிதி எஸ்.கோபாபாலசிங்கம் (கவிக்கோ வெல்லவூர் கோபால்) தலைமையில் கவியரங்கம் நடைபெறும்.

கவியரங்கத்தில் கா.சிவலிங்கம், மண்டூர் அசோகா, இந்திராணி புஸ்பராஜா, ச. கணேசமூர்த்தி, இ.பிரதீஸ்காந்த், ஜெ.அம்ரிதா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

# யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



எம். றொசாந்த்

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலத்துக்கு எதிராக யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு முன்பாக யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் புதன்கிழமை (24) முன்னெடுக்கப்பட்டது.

"ஜனநாயகத்தை அச்சுறுத்தாதே", "நிகழ் நிலை காப்புச் சட்டத்தை மீளப்பெறு", "ஊடகங்களை சமூக ஊடகங்களை நசுக்கும் நிகழ் நிலை காப்புச் சட்டத்தை மீளப்பெறு" போன்ற பல வசனங்கள் எழுதிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

## மனிதநேய செயற்பாடுகளுக்கு
# ஜப்பான் ஆதரவு தொடர்கின்றது



கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு "Grant Assistance for Grassroots Human Security Projects (GGP)" திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, சமூக ஒருங்கிணைவுக்கான டெல்வொன் உதவி (DASH) அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி உடன் கைச்சாத்திட்டிருந்தார். இந்நிகழ்வு 2024 ஜனவரி 23 ஆம் திகதி நடைபெற்றது.

வட மாகாணத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்காக GGP திட்டத்தினூடாக DASH அமைப்புக்கு 364,963 அமெரிக்க டொலர்களை (சுமார் ரூ. 116 மில்லியன்) தொகையை ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான மீட்சி மற்றும் ஒருமைப்பாட்டு செயன்முறையில் ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவளிப்பதுடன், 2027 ஆம் ஆண்டளவில் கண்ணிவெடி பாதிப்பற்ற நாடாக இலங்கையை மாற்றும் இலங்கையின் இலக்குக்கும் ஆதரவளிப்பதாகத் தூதுவர் மிசுகொஷி குறிப்பிட்டார்.

இந்த நன்கொடையைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் சந்திரசிறி குறிப்பிடுகையில்:

"இலங்கையின் நீண்ட கால நண்பரும், கண்ணிவெடி அகற்றும் பணிகளில் பாரிய நன்கொடை வழங்குநராகவும் ஜப்பான் திகழ்வதுடன், 2010 ஆம் ஆண்டு முதல் DASH க்கு தொடர்ச்சியாக நிதியளிப்புகளை வழங்கியுள்ளது. ஆயிரக் கணக்கானவர்களைப் பாதுகாப்பாக உயிர்வாழ்வதற்கு இந்த ஆதரவு உதவியுள்ளதுடன், தொடர்ச்சியான உதவியுடன், கண்ணிவெடிப் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், DASH க்கான ஜப்பானின் உதவி தொடர்வதுடன், பலருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அனுகூலமளிக்கின்றது. ஜப்பானுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். ஜப்பான் மற்றும் இதர தரப்பினரால் நிதியளிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளம் மக்களை ஒன்றிணைப்பதுடன், சமாதானம் மற்றும் மீள உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது." என்றார்.

GGP திட்டத்தின் கீழ் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபடும் நான்கு அமைப்புகளுக்கும் ஜப்பான் தொடர்ச்சியாக ஆதரவளித்துள்ளதுடன், 2002ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு நீண்ட காலமாக ஆதரவளிக்கும் நன்கொடை வழங்குநராகத் திகழச் செய்துள்ளது. ஜப்பானின் மனிதநேய செயற்பாடுகளுக்கான ஜப்பானின் மொத்த உதவி 45 மில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமானதாகும்.

DASH இனால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தினூடாக, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 6,000க்கும் அதிகமான மக்களை மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதார ஆதரவு வழங்கல் போன்றவற்றுக்குப் பங்களிப்பு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.







# தம்பலகாமத்தில் தைப்பொங்கல் விழா

ஏ.எச்_ஹஸ்பர்

தம்பலகாமம் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த பொங்கல் விழா, தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் செவ்வாய்க்கிழமை (23) பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றுள்ளது. சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் விசேட பூஜையும் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட பதவி நிலை உத்தியோகத்தர்கள், சக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 10,000 பேருக்கு கடிதம்

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் 10,000 பேருக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

சுகயீன விடுமுறையைப் பதிவு செய்து, அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியமைக்கு விளக்கமளிக்குமாறு கடிதம் அனுப்பியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ஊழியர்களின் அளிக்கும் பதில்களின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மின்சார சபை பேச்சாளர் பிரதி பொது முகாமையாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய குற்றச்சாட்டில் இலங்கை மின்சார சபையில் ஊழியர்கள் 66 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஊழியர்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மின்சார சபை ஊழியர்கள் 10,000 பேருக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

# ரயில் சிற்றுண்டிச்சாலையை 14 நாட்கள் மூடுமாறு உத்தரவு

6) கனகராசா சரவணன்

மட்டக்களப்பு- கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் பாடுமீன் நகர்சேர் கடுகதி ரயிலில் உள்ள சிற்றுண்டிச்சாலையைத் தற்காலிகமாக மூடுமாறு மட்டக்களப்பு நீதவான் நீதவான் செவ்வாய்க்கிழமை (23) உத்தரவிட்டுள்ளார்.

உணவு பாதுகாப்பு இல்லாமல் வியாபாரம் செய்தமை தொடர்பாக அதன் உரிமையாளருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கையடுத்து இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் சுகுணன் தலைமையில் த.மிதுன்ராஜ், சோதிராஜா அமிர்தன், சோமசுந்தரம் யசோதன் ஆகியோர் கொண்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொண்ட குழுவினர் திங்கட்கிழமை (22) இரவு நகரிலுள்ள பிரபல ஹோட்டல்கள் மற்றும் புகையிரத வண்டி சிற்றுண்டிச்சாலை, போன்றவற்றை திடீர் முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, பல ஹோட்டல்களில் மனித பாவனைக்கு உதவாத பல பொருட்கள் மீட்டு அழித்ததுடன், வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்ததுடன், சில ஹோட்டல்களை திருத்த வேலைகளை 3 நாட்களில் திருத்தி அமைப்பதற்காக இழுத்துப் பூட்டியுள்ளனர்.

# 845 கிராம் கஞ்சா மீட்பு: நால்வர் கைது

கனகராசா சரவணன்\

வவுனியாவில் இருந்து மோட்டர் சைக்கிளில் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிக்கு 845 கிராம் கஞ்சா கடத்தி சென்று வியாபாரிகளிடம் கஞ்சா வாங்க சென்ற வியாபாரிகள் உட்பட 4 பேரைக் கைது செய்த சம்பவம் திங்கட்கிழமை (22) மாலை களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டர் சைக்கிள் முச்சக்கரவண்டி ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கரவண்டி ஒன்றில் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு வியாபாரிகள் சென்று காத்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில், வவுனியாவில் இருந்து மோட்டர் சைக்கிள் ஒன்றில் கஞ்சாவைக் கடத்தி வந்த இருவர் காத்திருந்த வியாபாரிகளிடம் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மாறு வேடத்தில் இருந்த பொலிஸார் சுற்றிவளைத்து மடக்கிப்பிடித்தனர்.

# ஜனநாயகத்தின் நான்காவது தூணுக்கு கட்டுப்பாடா அல்லது ஆபத்தா?

பாராளுமன்றத்தின் ஒன்பதாவது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட இருப்பதாகக் கடந்த சில தினங்களாகத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதம், பாராளுமன்றத்தில் செவ்வாய்(23), புதன் (24) ஆகிய இரண்டு தினங்களும் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டு, திருத்தங்களுடன் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்தின் மீதான குழுநிலை திருத்தங்களின் போது, எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட சில முக்கியமான திருத்தங்களை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முற்றாக மறுத்துவிட்டது. இதனால், சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், ஒழுங்கு பிரச்சினைகளை எழுப்பிய ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தொடர்பில், உயர்நீதிமன்ற வழங்கிய வியாக்கியானங்களுக்கு உட்படாத வகையில், அரசாங்கத்தால் திருத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன எனக் கடுமையாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதேவேளை, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, தயாசிறி ஜயசேகர மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரும் ஒழுக்குப் பிரச்சினைகளை எழுப்பி, அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கடுமையாகக் கடிந்துகொண்டனர்.

இந்த விவாதத்தின்போது, உரையாற்றி பலரும், இவ்வருடம் தேர்தல் வருடமாகும். ஆகையால், கருத்துச் சுதந்திரத்தை முழுமையாக முடக்கும் வகையில், இச்சட்டமூலத்தை அரசாங்கம் அவசர, அவசரமாக முன்வைக்கின்றது என குற்றஞ்சாட்டியிருந்தனர்.

எனினும், பெண்கள், சிறுவர்கள், ஒருசில அரசியல்வாதிகள், அவர்களின் குடும்பத்தினர், மனைவி உட்பட பிள்ளைகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் சமூக வலைத்தளங்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையிலேயே இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டதாக அரசாங்க தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

சமூக ஊடகங்களில் இல்லையேல், முக்கியமான சில,பல விடயங்கள் அம்பலமாகியிருக்காது. அதேபோல, வன்முறைகளைத் தூண்டி விடுவதற்கும் சமூக ஊடகங்கள் பல முன்னிலையில் இருந்தன. ஆதலால், அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து சமூகம், நாட்டுக்குள் வன்முறைகளைத் தூண்டிவிடும் சமூக ஊடகங்கள் சிலதுக்கு கட்டுப்பாடுகள் அவசியம். அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

இதேவேளை, எவ்விதமான விலாசமும், தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்களும் இன்றி இயங்கும் சமூக ஊடகங்களைக் கட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை என்பதை வலியுறுத்துகின்றோம்.

எனினும், தனக்கு மேலிருக்கும் நிறைவேற்று, சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று தூண்களின் செயற்பாடுகளையும் கழுகுக் கண்கொண்டு பார்த்து, மக்களுக்கு அறிவித்து, அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளை விமர்சித்து, நேரடியான உறவுப்பாலமாய் இருப்பதுதான் ஊடகமாகும். இதைத்தான் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்பர்.

அந்த தூணுக்குள் ஒரு நிர்வாகத்தின் கீழியங்கும் சமூக ஊடகங்களின் பங்கு அளப்பறியது. செய்தி,கட்டுரை, புகைப்படங்கள், வீடியோக்கள் உள்ளிட்ட சகல அம்சங்களும் ஊடக ஒழுக்க நெறியின் கீழ் நின்றே தரவேற்றப்படுகின்றது. எனினும், பிரபல்யமாகிவிடவேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்துக்காக மட்டும் செயற்படும் ஒருசில சமூக ஊடகங்களுக்கு இச்சட்டம் சிக்கலாக இருக்கும். எவ்வாறோ சட்டம் வெளிவந்தால் மட்டுமே வெளிச்சம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# மஹிந்த அறிவித்தது பொதுஜன முன்னணியின் இறப்பையா?



எம்.எஸ்.எம். ஐயூப்

இவ்வருட இறுதியில் அரசியலமைப்பின் பிரகாரம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைப் பற்றி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கடந்த ஜனவரி 15ஆம் திகதி தெரிவித்த கருத்தானது அத்தேர்தலைப் பற்றி அக்கறை செலுத்துவோர் கேட்ட மிகவும் முக்கிய கருத்தாக இருக்கலாம்.

அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் மஹிந்த, ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், தமது கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை மட்டுமல்லாது அத்தேர்தலில் போட்டியிடுவதா? என்பதையாவது இன்னமும் முடிவு செய்யவில்லை என்று கூறியிருந்தார்.

அத்துடன், கடந்த டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளரங்கில் பொதுஜன முன்னணியின் இரண்டாவது தேசிய மாநாடு நடைபெற்றது. தமது கட்சி நாட்டில் எப்போது எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதில் போட்டியிடத் தயார் என்றும் அவ்வனைத்து தேர்தலிலும் தமது கட்சி வெற்றி பெறுவதும் நிச்சயம் என்றும் அம்மாநாட்டில் கலந்து கொண்ட மஹிந்த உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் மார்த்தட்டிக் கொண்டனர்.

தேர்தல்களில் வெற்றி பெறுவது ஒருபுறமிருக்க, சகல தேர்தல்களிலும் மிகவும் முக்கிய தேர்தலான ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதா? என்பதைக் கூட தமது கட்சி இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று இப்போது கட்சித் தலைவரே கூறுகிறார்.

தாம் போட்டியிடும் தேர்தல்களில் வெற்றி நிச்சயம் என்பது உறுதியென்றால் ஏனைய பிரதான கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயார் என்று கூறிவரும் நிலையில், பொதுஜன முன்னணி ஏன்? அதில் போட்டியிடுவதா? என்பதைக் கூட தீர்மானிக்கவில்லை?

ராஜபக்ஷக்களின் குடும்ப சொத்தாக பொதுஜன முன்னணி கருதப்பட்டாலும், படுதோல்வியடைவது நிச்சயம் என்பதால் ராஜபக்ஷக்களில் எவரும் போட்டியிடத் தயார் இல்லை. அதேவேளை, பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் அக்குடும்பத்தைக் கடுமையாக வெறுத்து வருகிறார்கள்.

வெற்றி பெறும் நிலை இருந்தால் ஜனாதிபதி வேட்பாளராக வேறு எவரையும் நிறுத்தவும் ராஜபக்ஷக்கள் தயாராக இல்லை. எனவே தான், போட்டியிடுவதைப் பற்றியாவது அவர்களால் தீர்மானிக்க முடியாமல் இருக்கிறது.

2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பொதுஜன முன்னணி, தாம் எதிர்கொண்ட முதலாவது பலப்பரீட்சையிலேயே, அதாவது 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலேயே சுமார் 70 சதவீத உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றிக்கொண்டது. இதனையடுத்து, 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியை அடைந்தார்.

ஆனால், மோசமான நிர்வாகத்தின் காரணமாகவும் பாரியளவிலான ஊழல்களாலும் அரசாங்கம் மூன்றாண்டுகளில் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து மக்கள் கிளர்ச்சியொன்றும் வெடித்து. ஜனாதிபதியும் நாட்டை விட்டுத் தப்பியோட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இப்போது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா? என்பதையாவது தீர்மானித்துக்கொள்ள முடியாமல் அக்கட்சி தடுமாறுகிறது.

தேர்தலைப் பற்றிய மஹிந்தவின் இக்கூற்றானது, தேர்தல் வெற்றியைப் பற்றி பொதுஜன முன்னணியின் தலைவர்கள் அண்மைக் காலமாகக் கூறி வந்த அனைத்து வீராப்புப் பேச்சுகளையும் செல்லுபடியற்றதாக்கி விட்டுள்ளது.

அதேவேளை, அது கரைந்து செல்லும் கட்சியில் இன்னமும் தொற்றிக்கொண்டு இருக்கும் ஆதரவாளர்களையும் மனமுடையச் செய்யும் என்பதை மறுக்க முடியாது.

இப்போது சில கட்சிகள் தமது ஜனாதிபதித் தேர்தல் ஆயத்தங்களை அறிவித்துள்ளன. பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவும் தாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் முகாமைத்துவ சபை என்ற புதிய குழு தமது கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை அத்தேர்தலின் போது போட்டியில் நிறுத்துவதாகக் கடந்த 9ஆம் திகதி தீர்மானித்தது. விக்ரமசிங்க அத்தேர்தலில் ஒரு கோடி வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என்ற ஐதேக தலைவர்கள் கூறி வருகின்றனர்.

அதேவேளை, ரணில் விக்ரமசிங்கவும் தமது கட்சியின் சார்பில் போட்டியில் நிறுத்துவதற்காகக் கருத்திற்கொள்ளப்பட்டு வருபவர்களில் ஒருவர் என பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியிருந்தார். அதற்கு முன்னர் வர்த்தகர் தம்மிக்க பெரேராவும் அவ்வாறு கருத்திற்கொள்ளப்பட்டு வருபவர்களில் ஒருவர் என பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கூறியிருந்தார்.
ஆனால், அக்கூற்றுக்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ இப்போது முடிவுகட்டிவிட்டார்.

எவ்வாறாயினும் பொதுஜன முன்னணி போட்டியிட்டாலும் ராஜபக்ஷ குடும்பத்தில் எவரும் போட்டியிடப் போவதில்லை என்றே இந்த சகல கூற்றுக்களின் மூலமும் தெரிகிறது. நாட்டில் அவர்கள் மீதான வெறுப்பின் அளவை அவர்கள் மதிப்பிட்டுள்ளார்கள் போலும். இந்த நிலையில், தமக்குக் கிடைக்காத வாய்ப்பை கட்சியில் வேறு எவருக்கும் கொடுக்கக் கூடாது என்பதே ராஜபக்ஷக்களின் நோக்கமாக இருக்கலாம். அல்லது இறுதி நேரத்தில் நாமல் கூறுவதைப் போல் ரணிலை தமது வேட்பாளராக நிறுத்த ராஜபக்ஷக்கள திட்டமிட்டு இருக்கிறார்கள் என்றும் ஊகிக்கலாம். எதுவாக இருந்தாலும் பொதுஜன முன்னணி மிக மோசமான வீழ்ச்சியை அடைந்து இருக்கிறது என்பதே அவற்றின் மூலம் தெரியும் உண்மையாகும்.

இவர்களுக்குப் புறம்பாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சித் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் வர்த்தகர்களான தம்மிக்க பெரேரா, தெரண குழுமத்தின் அதிபர் திலித் ஜயவீர மற்றும் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்னாயக்க ஆகியோரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

இம்முறை தமிழ் மக்களின் குறிப்பாக வட மாகாண தமிழ் மக்களின் வாக்குகள் இவர்களில் எவருக்கும் கிடைக்காமல் போகலாம். ஏனெனில், தேர்தலைப் பகிஷ்கரிப்பதா? அல்லது தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா? என்ற விவாதம் வட மாகாணத்தில் இப்போது நடைபெற்று வருகிறது. தமிழ் மக்கள் இதில் எந்த முடிவை எடுத்தாலும் அவர்களின் வாக்குகளைத் தென்பகுதி வேட்பாளர்கள் பெறப்போவதில்லை.

முஸ்லிம் வாக்காளர்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி பிரபலியம் அடைந்து வருவதை அவதானிக்க முடிந்த போதிலும், பட்டம் பதவிகளைக் குறியாகக்கொண்டு அரசியலை நடத்தும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குத் தேசிய மக்கள் சக்தியில் இடம் இருக்குமா? என்பது சந்தேகமாகும். எனவே, அவர்கள் பெரும்பாலும் இப்போது இருப்பதைப் போலவே ஐக்கிய மக்கள் சக்தியோடே இருப்பார்கள்.

எந்தக்கட்சி எந்த முடிவை எடுத்தாலும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் தேசிய மக்கள் சக்திக்குமே இடையிலேயே போட்டி இருப்பதாகத் தெரிகிறது. அதிலும், மக்கள் விடுதலை தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முன்னணியில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களது பொதுக் கூட்டங்கள், வெறுப்படைந்து இருக்கும் தென் பகுதி மக்கள் அன்றாட வாழ்க்கையின் போது வெளியிட்டு வரும் கருத்துக்கள் மற்றும் சில நிறுவனங்களால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்கள் மூலம் அது தெரிய வருகிறது.

இந்த நிலையில், தென் பகுதியில் கட்சித் தாவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ.சு.க எம்.பி. ஷான் விஜயலால் டி சில்வாவும் பொதுஜன முன்னணியிலிருந்து விலகி டலஸ் அலஹப்பெருமவுடன் சுதந்திர மக்கள் சபை என்ற கட்சியை நிறுவிய பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டிலான் பெரேரா மற்றும் கலாநிதி நாலக்க கொடஹேவா ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கி மக்கள் சக்தியில் இணைந்துகொண்டுள்ளனர்.

இந்தக் கட்சித் தாவல்களில் எந்தக் கொள்கை அடிப்படையோ அல்லது அரசியல் நாகரிகமோ இல்லை. அரசியலில் தமது இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும், பட்டம் பதவிகளைப் பெற வேண்டும் என்பது மட்டுமே இந்தக் கட்சித் தாவல்களின் நோக்கமாகும். பொதுஜன முன்னணியிலிருந்து விலகி டலஸோடு இணைந்து கட்சி அமைத்தோர்களினதும் விமல் வீரவன்சவோடு கட்சி அமைத்தோர்களினதும் அனுர பிரியதர்ஷன யாப்பாவுடன் கூட்டுச் சேர்ந்தோர்களினதும் நோக்கம் அதுவே. இப்போது அவர்கள் அவ்வாறு அமைந்த கட்சிகளிலிருந்து விலகி சஜித்தோடு சேரும் போதும் கொள்கைப் பற்றோ அல்லது அரசியல் நாகரிகமோ அவர்களைத் தூண்டவில்லை.

உதாரணமாக, கெரவலபிட்டிய மின் நிலையத்தின் பங்குகளில் 40 சத வீதத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்வதை விமர்சித்த விமல் வீரவன்சவையும் உதய கம்மன்பிலவையும் கோட்டாபய ராஜபக்ஷ 2022 ஆண்டு மார்ச் 3ஆம் திகதி அமைச்சரவையிலிருந்து நீக்கினார். அப்போது கோட்டா பொருளாதார நெருக்கடியால் செய்வதறியாது தடுமாற்றத்தில் இருந்தார். இந்த நிலையில், பதவி நீக்கம் செய்யப்பட்டு ஒரு மாதத்தில் அவர்கள் மீண்டும் கோட்டாவை அணுகி சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றில் மூலம் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கலாம் என்று அவரை ஏற்றுக்கொள்ளச் செய்தனர். அப்போது கெரவலபிட்டிய ஒப்பந்தம் இரத்துச் செய்யவேண்டும் என்று அவர்கள் கேட்கவில்லை. எங்கே கொள்கை?



## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனத்தை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப்பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப்பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. அத்துடன் தேவைற்ற விடயங்களையும் அசைபோடுகின்றது.

இதனால் தேகம் அல்லாடும். எனவே, மனிதன் நிம்மதியாக வாழ, புலன் அறிவைத் தெளவாக வைத்திருக்க வேண்டும். நல்லதை மட்டும் உறிஞ்சும் திறனை வளர்த்திடுக.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தாழ் பாலத்தினை மேம்பாலமாக மாற்றுங்கள்

முல்லைத்தீவு- மேழிவனம் கிராமத்தின் தாழ் பாலத்தினை மேம்பாலமாக மாற்றுவதற்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேழிவனம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மணவாளன்பட்டமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் மேழிவனம் கிராமம் காணப்படுகின்றது. இக்கிராமத்தில் சுமார் 30 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மழை காலத்தில் இக்கிராமத்தில் இருந்து ஆமையன் ஆறு வழியாக பெருமளவு வெள்ளம் இக்கிராம தாழ் பாலத்தினை மூடிப் பாய்வதன் காரணமாக கிராம மக்கள் மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதிக்கு வர முடியாத நிலைமை இருக்கும்.

இந்நிலையில், குறித்த தாழ் பாலத்தினை மேம்பாலமாக மாற்றுவதற்குப் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேழிவனம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்





பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(23) இடம்பெற்ற உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில்...

# “இருப்புக்கான அரசின் துருப்புச் சீட்டாகும்”



சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் மோசமான விடயங்களை தடுப்பதற்கு இந்த சட்டமூலத்தை கொண்டுவருவதாக அரசாங்கம் காரணம் கூறினாலும் சட்டமூலத்தில் உள்ள 57 பிரிவுகளில் 2 பிரிவுகளில் மாத்திரமே பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சமூகவலைத்தலங்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் மோசமான விடயங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கே நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை கொண்டுவருவதாக அரசு காரணம் கூறுகின்றது.. ஆனால் இதனைக் காரணம் காட்டிக்கொண்டு அரசாங்கத்தின் இருப்பை பாதுகாத்துக்கொள்ள இந்த சட்டமூலத்தை அரசு துருப்பு சீட்டாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறது.

சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் மோசமான விடயங்களைத் தடுப்பதற்கு இந்த சட்டமூலத்தை கொண்டுவருவதாக அரசாங்கம் காரணம் கூறினாலும், சட்டமூலத்தில் உள்ள 57 பிரிவுகளில் 2 பிரிவுகளில் மாத்திரமே பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து விடயங்களும் வலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவே உள்ளது.

அரசின் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் இன்று மக்களை நெருக்கடிக்கு ஆளாக்கியுள்ளது. அதனால் அரசுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் எழும் விமர்சனங்களை அடக்குவதற்கான நடவடிக்கையாகவே இதனை நாங்கள் பார்க்கிறோம். இது ஜனநாயக விரோதமானது. இந்த அரசு மக்கள் போராட்டத்துக்குப் பயப்படுகிறது. அதனால்தான் அவசரமாக இந்த சட்டமூலத்தை கொண்டுவருகிறது என்றார்.

# “கூட்டமைப்பை மீண்டும் ஒன்றிணைக்க பாடுபடுங்கள்”

பிரிந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் ஒன்றிணைக்க இலங்கைத் தமிழரசு கட்சியின் புதிய தலைவரான ஸ்ரீதரன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட எம்.பி.யுமான வெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை தனது அதிகாரத்தை, பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. சமூகவலைத்தளங்கள் இன்றி இன்று எதுவுமே இல்லை. இதில் சிலது நல்லதாக நடக்கலாம் சிலது கெட்டதாக நடக்கலாம். இதில் நல்லத்துக்கு நாங்கள் அனுசரணையாக இருப்பது நல்லது. எனவே, இந்த சமூக ஊடகங்களை முடக்க, கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது மனிதாபிமானமற்றது. இவற்றைக் கட்டுப்படுத்திவிட்டால் மக்களுக்குத் தெரிய வேண்டிய உண்மையான விடயங்கள் தெரியாமல் போய் விடும்.

நாட்டில் இன்று ‘யுக்திய’ என்ற பெயரில் பல கொலைகள் நடக்கின்றன. சிவில் உடையில் பொலிஸார் மக்களைச் சுட்டுக் கொல்வதும் வாகனங்களைத் தடுத்துச் சோதனையிட்டு மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாக்குவதும் போட்டாகிப்போருள் கடத்தல் என்ற பெயரில் கொலை செய்வதும் அடாவடித்தனமாக நடப்பதும் இன்று சர்வசாதாரணமாகிவிட்டது.. நாட்டில் ஜனநாயகமாக மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்குத் தடை ஏற்படுகின்றது. இது தேர்தலை பிற்போடுவதற்கு ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கையா என்ற சந்தேகம் எமக்குள்ளது.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிவஞானம் ஸ்ரீறிதரனுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பிரிந்திருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது

அண்மைய நாட்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்ற விடயம் காலையில் இங்குப் பேசப்பட்டது. இந்த விடயத்தில் மலையக விவசாயிகளையும் இணைத்து அவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றார்.

# “ஸ்ரீதரன் மீண்டும் சபையில் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும்”



தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவு கூரும், வணங்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான ஸ்ரீதரன் எம்.பி. உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை என மீண்டும் இந்த உயரிய சபையில் சத்திரியப்பிரமாணம் செய்ய வேண்டும் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் தேசியப் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு தலைவரும் அரச தரப்பு எம்.பியுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர வலியுறுத்தினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஸ்ரீதரன் எம்.பி. தலைவராக தெரிவு செய்யப்பட்டவுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) கிளிநொச்சி பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். நாட்டை பிரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு விடுதலைப் புலிகள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.அதில் இறந்தவர்களையே ஸ்ரீதரன் எம்.பி. முதலில் வணங்கினார்.

எம்.பிக்களாக பதவியேற்கும்போது, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை என்று இந்த உயரிய சபையில் சத்தியபிரமாணம் செய்துள்ள நிலையில் நாட்டை பிரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் போராளிகளை ஸ்ரீதரன் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எவ்வாறு நினைவு கூர முடியும் வணங்க முடியும்?

எனவே இதற்கு அனுமதிக்க முடியாது. ஆகையால், விடுதலைப்புலிகளை நினைவு கூரும், வணங்கும் ஸ்ரீதரன் எம்.பி. உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை என மீண்டும் இந்த உயரிய சபையில் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும்.

இதேவேளை, சமூக ஊடகங்களைக் கண்காணிக்கும் வகையில் சட்டமியற்றுவது அவசியம். சமூக ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டே சமூக விரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூக ஊடகங்களில் தீவிரமடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆகவே இந்த சட்டமூலத்துக்கு நான் ஆதரவாகவே வாக்களிப்பேன் என்றார்.

# ”விவாதம் சட்டத்துக்கு முரணானது”



பாராளுமன்றத்தில் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகளை மீறி தமக்குள்ள பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த விவாதம் சட்டத்திற்கு முரணானது. பாராளுமன்ற நிலையியல் கட்டளையை மீறியே நடக்கின்றது. துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கை வந்த பின்னரே குறித்த விடயம் தொடர்பில் விவாதம் நடத்த வேண்டும். அதன்படி அந்த அறிக்கை வரும் வரையில் விவாதம் ஒத்தி வைக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாது விவாதம் முன்னெடுக்கப்பட வேண்டும். மேற்பார்வை குழு முன்வைக்கும் பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அதனைச் செய்யாது விவாதத்தை நடத்தி நிறைவேற்ற முயற்சிக்கின்றனர்.

இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் நிலையியல் கட்டளைகளுக்கு முரணான வகையிலேயே நடக்கின்றது. அரசாங்கம் தங்களிடமுள்ள பெரும்பான்மையைப் பயன்படுத்தி தமக்குத் தேவையானவாறு ஒழுங்கு விதிகளை மீறி நடந்துகொள்கின்றனர் என்றார்.

# “ஆட்சியாளர்களை வரலாறு மன்னிக்காது”

சட்டங்களால் ஏதும் மாறப்போவதில்லை. முதலில் அரசியல் தீர்வை வழங்கி இன நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துங்கள். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் என்பவற்றைக் கொண்டு வந்து தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்தால் வரலாறு ஆட்சியாளர்களை மன்னிக்காது என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட எம்.பியுமான சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

‘நமக்கு முடிவு என்பதொன்று உள்ளது என்பதைச் சிலர் உணர்வதில்லை’ என புத்த பகவான் குறிப்பிட்ட கருத்தை இவ்விடயத்தில் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டில் உள்ள அடக்குமுறைகளில் ஒன்றாக நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மாறி விடுமோ என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சட்டங்கள் கொண்டு வருவதற்கான காரணத்தை ஆழமாக ஆராய வேண்டும். கடந்த 80 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள தமிழ் - சிங்கள முரண்பாடு மற்றும் இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சிங்கள தலைவர்கள் தவறியுள்ளார்கள் என்பதை வரலாறு சான்றுப்படுத்தியுள்ளது .பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் சந்தர்ப்பத்தை அரச தலைவர்கள் புறக்கணித்துள்ளார்கள்.

ஒருவரது ஆட்சியைப் பிற தரப்பு எதிர்ப்பதும், அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கடந்த காலத்தை விமர்சிப்பதும் இந்த நாட்டில் பெரும் அநியாயமாக உள்ளது. ஆகவே, இந்த உயரிய சபை பல மனிதர்களையும், எண்ணங்களையும், கண்டுள்ளது. சமாதானம் என்பது வெகு தொலைவில் உள்ளது அதனை எட்டிப்பிடிக்கும் சிறந்த தலைவரை நாட்டு மக்கள் தேடுகிறார்கள்.

தமது கருத்தை பொது வெளியில் பதிவு செய்யும் உரிமை மக்களுக்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தை நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. தனி மனித சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமைகள் இந்த சட்டமூலத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

உலக நாடுகளிலும் தொலைத் தொடர்புடனான சட்டங்கள் காணப்படுகின்றன. ஆனால், அச்சட்டங்கள் ஏதும் கடுமையானதாக இல்லை. நாட்டின் மக்கள் மீது அதிகார துஷ்பிரயோகம் செய்வதை நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் காண்பிக்கிறது. ஆகவே, இது முற்றிலும் பாரதூரமானது.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் மீது ஒரு காலத்தில் விதிக்கப்பட்ட தடை தற்போது சிங்கள மக்கள் மீது மறைமுகமாக நகர்த்தப்படுகிறது. தொலைக்காட்சி, வானொலி ஆகிய தொலைத்தொடர்பு சாதனங்களை விடவும் தொலைபேசி ஊடாகவே இளைய தலைமுறையினர் உலக நடப்புகளைத் தெரிந்து கொள்கின்றனர்.



1978ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அதன் விளைவைச் சிங்கள மக்கள் அறிந்திருக்கவில்லை. அரகலயவுக்கு பின்னர் தான் புதிய சட்டம் கொண்டு வர அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. பூனைக் கண்களை மூடிக் கொண்டு பால் குடிப்பதைப் போன்று கண்களை மூடிக் கொண்டு சட்டங்களைக் கொண்டு வந்தால் அது இந்த நாட்டை அதளபாதாளத்துக்குள் தள்ளும்.

தேசிய இனங்களுக்கு இடையில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப அவதானம் செலுத்துங்கள். தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த எந்த திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை. யாரிடம் கடன் வாங்கலாம், அதனைக் கொண்டு எவ்வாறு தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ளலாம் என்பது தொடர்பில் மாத்திரம் அரச தலைவர்கள் அவதானம் செலுத்துகிறார்கள்.

இலங்கையைப் போன்று தான் பாகிஸ்தான் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு சுய தேசிய பொருளாதாரம் உள்ளது. அந்த நாட்டு மக்கள் தேசிய பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். அதனைக் கொண்டு தமது ஜீவனோபாயத்தை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இலங்கையில் அவ்வாறான நிலை கிடையாது. சட்டங்களால் ஏதும் மாறப்போவதில்லை. முதலில் அரசியல் தீர்வை வழங்கி இன நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துங்கள். தமிழ், சிங்களம், முஸ்லிம் சமூகத்தினரைத் தேசிய இனமாக அடையாளப்படுத்தி ஒற்றுமையைப் பலப்படுத்துங்கள்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் என்பவற்றைக் கொண்டு வந்து தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்தால் வரலாறு ஆட்சியாளர்களை மன்னிக்காது. வரலாறு இந்த நாட்டை தவறான பாதைக்குக் கொண்டு செல்லும் என்றார்.

சான் பிரான்சிஸ்கோ

# ‘இந்தியா இல்லாமல் இருப்பது அபத்தம்’

ஐ.நா பாதுகாப்பு அவையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் இல்லை என்பது அபத்தமானது என்று உலகின் மிகப் பெரிய செல்வந்தரும் எக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருமான எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “ஒரு கட்டத்தில் ஐ.நா. அமைப்புகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். பிரச்சினை என்னவென்றால், அதிகப்படியான அதிகாரம் உள்ளவர்கள் அதை விட்டுவிட விரும்பவில்லை. உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்தாலும், ஐ.நா. பாதுகாப்பு அவையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் இல்லை என்பது அபத்தமானது. ஆபிரிக்காவுக்கும் கூட்டாக நிரந்தர இடம் வழங்கப்பட வேண்டும்” என தெரிவித்துள்ளார்.

> “அதிகப்படியான அதிகாரம் உள்ளவர்கள் அதை விட்டுவிட விரும்பவில்லை. உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்தாலும், ஐ.நா. பாதுகாப்பு அவையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் இல்லை என்பது அபத்தமானது ஆபிரிக்காவுக்கும் கூட்டாக நிரந்தர இடம் வழங்கப்பட வேண்டும்



## இந்து பெண் சிறுமியை மீட்க போராடும் முஸ்லிம்கள்

பாகிஸ்தான்




பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் எட்டு வயது இந்து சிறுமி பிரியா குமாரி கடத்தப்பட்டதற்கு முஸ்லிம் ஆர்வலர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். பிரியாவின் குடும்பத்தினர் இரண்டு ஆண்டுகளாக அவரை மீட்க முயற்சித்து வருகின்றனர்.

ஆனால், இப்போது அவர்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். ஆனால், முஸ்லிம் ஆர்வலர்கள் இந்த போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

பிரியாவின் தந்தை ராஜ்குமார் ஒரு கடை வைத்திருக்கிறார், அவர் தனது மகளை மீட்க இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து போராடி வருகிறார். அவர் காவல்துறை அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் தொடர்ந்து அணுகினார், ஆனால், இப்போது அவர் நம்பிக்கையை இழந்துவிட்டார்.

இது குறித்து பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, “முஹர்ரம் அன்று பிரியா குமாரி கடத்தப்பட்டார். அன்றைய தினம் மொபைல் போன் சேவை முடக்கப்பட்டிருந்தது, பொது போக்குவரத்து வசதியும் இல்லை. அப்பகுதியில் சிசிடிவி கெமெராக்கள் எதுவும் பொருத்தப்படவில்லை. இது ஒரு கடினமான வழக்கு, 1000க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தியுள்ளோம். அவர்களில் 22 பேரிடம் டிஎன்ஏ பரிசோதனையும் நடத்தப்பட்டது” என்றார்.

கனடா

## சர்வதேச மாணவர் விசாக்களுக்கு வரம்


கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களுக்கு வழங்கப்படும் விசா காலம் இரண்டு வருடங்களாக கனடா அரசு வரம்பு நிர்ணயித்துள்ளது. இதனால், இந்திய மாணவர்கள் பாதிக்கப்பட வாய்ப்பு நிலவுகிறது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய குடியேற்றத்துறை அமைச்சர் மார்க் மில்லர், “கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 2022ஆம் ஆண்டு 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட கல்வி விசாக்கள் வழங்கப்பட்டன. 2023ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 5.60 இலட்சம் மாணவர் விசாக்கள் வழங்கப்பட்டன. 10 ஆண்டுகளுக்கு முன் நாங்கள் ஏற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைவிட இது மூன்று மடங்கு அதிகம் என்றார்.



புதுடெல்லி

## 135 குழந்தைகளுக்கு ராமர், சீதை பெயர்கள்



அயோத்தியில் ராமர் கோயிலின் தாக்கம் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ளது. இது, புதுடெல்லிக்கு மிக அருகில் அமைந்துள்ள உத்தரப்பிரதேசத்தின் முக்கிய நகரமாக அலிகரில் வித்தியாசமானதாக உள்ளது.

இங்கு ராமர் கோயில் திறக்கப்பட்ட நாளான ஜனவரி 22இல் இந்து குடும்பங்களில் மட்டும் 135 குழந்தைகள் பிறந்தன. இக்குழந்தைகளில் ஆண்களுக்கு ராம், ராம்குமார், ராமேஷ்வர், ரகுராம், ரகுநந்தன் என ராமர் பெயரை அடிப்படையாக வைத்து பெயர்கள் வைக்கப்பட்டன.

அதேபோல், பெண் குழந்தைகளுக்கு ராமரின் மனைவியான சீதா பெயரின் அடிப்படையில், சீதாமா, சீதாதேவி என்ற வகையில் பெயரிட்டு அந்த குழந்தையின் பெற்றோர் மகிழ்ந்துள்ளனர்.

இதுகுறித்து ‘குழந்தையின் பெற்றோர்களில் ஒருவரான குல்தீப்சிங் கூறும்போது, “குழந்தைகளின் பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் ராம பக்தர்கள். இதன் காரணமாக அவர்களது குடும்பங்களில் மகிழ்ச்சி பெருகியுள்ளது. இதில் அறுவை சிகிச்சையால் பிறந்த குழந்தைகளின் பெற்றோர்களில் பலரும் ஜனவரி 22இல் பெற்றெடுக்க வேண்டி மருத்துவமனைகளில் முன்கூட்டியே நேரம் கேட்டிருந்தவர்கள் எனக் கேள்விப்பட்டோம்” என்றார்.

இதுபோல், அயோத்தியில் ராமர் சிலையின் பிராண பிரதிஷ்டை நேரமான நண்பகல் 12.30 மணிக்கு மேல் அறுவை சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன. அலிகரின் அருகிலுள்ள நகரமான பெரோஸாபாத்தில் 56 குழந்தைகள் ஜனவரி 22இல் பிறந்தன. முஸ்லிம்களுக்கும் எதிர்பார்ப்புகள் இன்றி இதே நாளில் குழந்தைகள் பிறந்தன. இவர்களில் பெரோஸாபாத்தை சேர்ந்த முஸ்லிம் பெண்ணான பர்ஸானா தனது குழந்தைக்கு ராம் ரஹீம் எனப் பெயரிட்டுள்ளார்.

ஆக்ரா மற்றும் சில முக்கிய நகரங்களிலும் இதே நிலை காணப்பட்டது.

அதேபோல், ஜனவரி 22ஆம் திகதியை திடீர் எனக் குறிப்பிட்டு பலர் தங்கள் திருமணங்களை நடத்தி முடித்துள்ளனர்.

இந்த வகை திருமணங்கள் புதுடெல்லியில் மட்டும் ஆயிரத்திற்கும் அதிகமாக நடைபெற்றுள்ளன.

பாகிஸ்தான்

## பாகிஸ்தான் கண்டனம்



உத்தரப் பிரதேசம், அயோத்தி ராமஜென்ம பூமியில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்ட ஸ்ரீ ராமர் கோயிலானது திங்கட்கிழமை (22) கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது .

இந்தியப் பிரதமர் மோடி தலைமையில் திறந்து வைக்கப்பட்ட

இந்த ராமர் கோவில் திறப்பு விழா குறித்து பாகிஸ்தான் அரசு கண்டன அறிக்கையென்றை வெளியிட்டுள்ளது.

அதில், “இடிக்கப்பட்ட மசூதி இருந்த இடத்தில் கட்டப்பட்ட ராமர் கோவில், இந்திய ஜனநாயகத்தில் நீண்ட காலத்துக்கு ஒரு கறையாக இருக்கும். அத்துடன், இந்திய முஸ்லிம்களை அரசியல் மற்றும் சமூக ரீதியாக ஓரங்கட்டுவதற்கான முயற்சிகளை பிரதிபலிக்கின்றன.

இடிக்கும் ஆபத்தில் வாரணாசியின் ஞானவாபி மசூதி, மதுராவின் ஷாஹி இத்கா உள்ளிட்ட மசூதிகளின் பட்டியல் அதிகரித்து வருகிறன.

இந்தியாவில் அதிகரித்து வரும் ‘இந்துத்வா’ சித்தாந்தத்தின் அலை மத நல்லிணக்கம் மற்றும் பிராந்திய அமைதிக்கு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது. இந்தியாவில் அதிகரித்து வரும் இஸ்லாமிய வெறுப்பு நடவடிக்கைகள், வெறுப்பு பேச்சு மற்றும் வெறுப்பு குற்றங்களை சர்வதேச சமூகம் அறிந்து கொள்ள வேண்டும்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா எதிர் இங்கிலாந்து:

# இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்



இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, ஹைதரபாத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்குள் இத்தொடர் அடங்குகின்ற நிலையில் இரண்டு அணிகளுக்கும் இத்தொடர் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

அதுவும் அண்மைய காலங்களில் இந்தியாவை சொந்த மண்ணில் வீழ்த்துவது இயலாக் காரியமாகக் காணப்படுகின்ற நிலையில் இத்தொடர் கவனம் பெறுவதோடு, இங்கிலாந்து அண்மைய காலங்களில் கடைப்பிடிக்கின்ற அதிரடியானது எவ்வாறு இந்தியாவில் கைகூடுமென மற்றைய அணிகளும் இத்தொடரை நோக்குகின்றன.

எதிர்பார்க்கப்படும் இந்திய அணி: யஷஸ்வி ஜைஸ்வால், றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), ஷுப்மன் கில், ஷ்ரேயாஸ் ஐயர், லோகேஷ் ராகுல், கே.எஸ். பாரத், இரவீந்திர ஜடேஜா, இரவிச்சந்திரன் அஷ்வின், அக்ஸர் பட்டேல், மொஹமட் சிராஜ், ஜஸ்பிரிட் பும்ரா.

இங்கிலாந்து அணி: ஸக் குறோலி, பென் டக்கெட், ஒலி போப், ஜோ றூட், ஜொனதன் பெயார்ஸ்டோ, பென் ஸ்டோக்ஸ் (அணித்தலைவர்), பென் போக்ஸ் (விக்கெட் காப்பாளர்), றெஹான் அஹ்மட், டொம் ஹார்ட்லே, மார்க் வூட், ஜேக் லீச்.



இந்திய டெஸ்ட் குழாமில்

## கோலியின் பிரதியீடாக சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டிடார்

இந்திய டெஸ்ட் குழாமில் விராட் கோலியின் பிரதியீடாக ரஜாட் பட்டிடார் அழைக்கப்பட்டுள்ளார்.


இங்கிலாந்துக்கெதிரான முதலிரண்டு போட்டிகளிலிருந்தும் தனிப்பட்ட காரணங்களுக்காக கோலி விலகியிருந்தார்.

பட்டிடார் டெஸ்ட் குழாமுக்கு அழைக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

## புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார் மிலிட்டாவோ

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டின் பின்களவீரரான ஈடர் மிலிட்டாவோ, கழகத்துடனான தனது ஒப்பந்தத்தை எதிர்வரும் 2028ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் நீடித்துள்ளதாக கழகம் நேற்று முன்தினமிரவு அறிவித்துள்ளது.

போர்த்துக்கல் கழகமான போர்ட்டோவிலிருந்து கடந்த 2019ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மட்றிட்டில் 26 வயதான மிலிட்டாவோ இணைந்திருந்தார்.





இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது:

## அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா மேற்கிந்தியத் தீவுகள்?

அவுஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது பிறிஸ்பேணில் பகலிரவுப் போட்டியாக இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் தோல்வியடைந்த மேற்கிந்தியத் தீவுகள், இப்போட்டியில் துடுப்பாட்டத்தில் முன்னேற்றத்தைக் காண்பித்தாலே அவுஸ்திரேலியாவுக்கு சவாலை அளிக்க முடியும்.

அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட், அலிக் அதனஸே உள்ளிட்டோர் மேம்பட்ட பெறுபேறுகளை காண்பிக்க வேண்டியுள்ளது.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்த வரையில் ஆரம்பத் துடுப்பாட்டவீரராக ஸ்டீவ் ஸ்மித்திடமிருந்து ஓட்டங்கள் திர்பார்க்கப்படுகின்றன.



இருபதுக்கு– 20 சர்வதேசப் போட்டித் தொடரில்

## கமின்ஸ், ஸ்டார்க், ஸ்மித்துக்கு ஓய்வு

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டித் தொடரில் பற் கமின்ஸ், மிற்செல் ஸ்டார்க், ஸ்டீவன் ஸ்மித்துக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

குழாம்: மிற்செல் மார்ஷ் (அணித்தலைவர்), டேவிட் வோர்னர், மற் ஷோர்ட், ட்ரெவிஸ் ஹெட், கிளென் மக்ஸ்வெல், டிம் டேவிட், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், ஜொஷ் இங்லிஸ், மத்தியூ வேட், ஷோன் அபொட், ஜேஸன் பெஹ்ரென்டோர்ஃப், நாதன் எலிஸ், அடம் ஸாம்பா, ஜொஷ் ஹேசில்வூட்.

கொல்கத்தா

## பிரியாணியால் முடிவை கைவிட்ட வியாபாரி

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவைச் சேர்ந்த 45 வயதான வியாபாரிக்குத் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட குடும்பத் தகராறில் தனது 2ஆவது மகளுடன் மனைவி பிரிந்து சென்று விட்டார்.

தனது மூத்த மகளுடன் வசித்து வந்த வியாபாரி, மனைவி பிரிந்து சென்றதால் விரக்தி அடைந்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டார். சம்பவத்தன்று தனது மூத்த மகளை மோட்டார் சைக்கிளில் அழைத்துக் கொண்டு கொல்கத்தா சயின்ஸ் சிட்டிக்கு சென்றார்.

அங்குள்ள மேம்பாலத்தில் மீது ஏறிக் குதிக்க முயன்றார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பேச்சுவார்த்தை நடத்தினர். எனினும் தன்னுடைய முடிவில் வியாபாரி உறுதியாக இருந்தார்.

அந்நேரத்தில், தான் பொலிஸாருக்கு ஒரு யோசனை வந்தது. கொல்கத்தா சயின்ஸ் சிட்டி நகரில் பிரபல ஹோட்டல் ஒன்றில் ருசியான பிரியாணி விற்பனை செய்யப்படுகிறது. அது பற்றி டைல்ஸ் வியாபாரியிடம் கூறினர். தன்னுயிரை மாய்க்கும் முடிவைக் கைவிட்டால் பிரபல ஹோட்டலில் இருந்து பிரியாணி வாங்கி தருகிறோம் எனத் தெரிவித்தனர். அதன்பின்னரே இறங்கிவந்தார். அவருக்குப் பிரியாணி வாங்கிக் கொடுத்தனர். அதனைச் சாப்பிட்டுவிட்டு

வீட்டிற்குத் திரும்பிச் சென்றார். இதனால் பொலிஸார் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 25 ஜனவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.